**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

06.08.2025

O.S. No. 276/2022

P.W. 1 திரு. M.S. மணி

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

வா.சா.ஆ. 8 ல் குறிப்பிடப்பட்டுள்ள O.S. 109/2004 ன் தீர்ப்புரை யார் மீது யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் விஸ்வ ஹிந்து வித்ய கேந்திரா மீது மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் தாக்கல் செய்தது. அந்த வழக்கின் பிராதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு 18.01.2005 அன்று தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஏற்கனவே அவர்களுக்குள் இருந்த கிரய ஒப்பந்தத்தை கோரி தாக்கல் செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெற்று தர வேண்டும் என்றுதான் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு பிறகு 07.11.2007 அன்று வெங்கடாச்சலம் ஐயர் கொடுத்த மனுவின் பேரில் விசாரணைக்கு வருமாறு கோட்டாட்சியர் ஒரு அறிவிப்பு அவருக்கு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த மனு வெங்கடாச்சலம் ஐயரால் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்ல முடியும். அந்த குறிப்பில் கோவில் தானிய களஞ்சியம் என்பதை பட்டா நிலம் என மாற்றம்

செய்து தரும்படி கொடுத்த மனு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 8 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அசல் வழக்கு எண். 109/2004 மற்றும் 110/2004 இரண்டு வழக்குகள் தொடர்பானது. அசல் வழக்கு எண். 109/2004 ல் சர்வே எண். 122/2 மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்குதான் சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. அசல் வழக்கு எண். 110/2004 சொத்தை கிரயம் செய்துதர கோரி விஸ்வ ஹிந்து வித்ய கேந்திராவினால் மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் மீது தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கு எண். 110/2004 கோரியவாறு தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்பேரில் மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் னால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 109/2004 தள்ளுபடி செய்யப்பட்டது. அசல் வழக்கு எண். 110/2004 ல் சம்பந்தப்பட்ட கிரய ஒப்பந்தத்தில் தேதி என்ன என்றால் வா.சா.ஆ. 8 ன்படி 16.11.1983 ஆகும். அசல் வழக்கு எண்கள். 109/2004 மற்றும் 110/2004 ன் இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். 17.03.1998, 22.10.1998, 24.11.1998, 19.01.1999 மற்றும் 12.10.1999 ஆகிய தேதிகளில் நாங்கள் O.S. 110/2004 ன் பிரதிவாதிகளிடம் ஒப்பந்தப்படி கிரய ஆவணம் எழுதி தரக் கோரியதாக காட்டும் ஆவணம் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 06.11.1998 ல் நாங்கள் அந்த பிரதிவாதிக்கு அனுப்பியதாக அந்த வழக்கில் கூறியுள்ள கடிதத்தையும், இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 01.11.1999 ல் நாங்கள் அந்த பிரதிவாதிக்கு அனுப்பியதாக அந்த வழக்கில் கூறியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பை இந்த

நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 8 ல் உள்ள O.S. 110/2004 தீர்ப்பாணையில் பட்டிகையில் உள்ள சர்வே எண். 1/1 ல் 4.45 ஏக்கரில் 11 செண்ட், சர்வே எண். 1/31 ல் 4.45 ஏக்கரில் 11 செண்ட் மற்றும் சர்வே எண். 122 ல் 6.07 ஏக்கரில் 15 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் எதை வைத்து அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தொியாது. அந்த பட்டிகையில் அந்த சொத்திலிருந்து மற்ற கட்டிடங்கள் மற்றும் இதர ஜங்கம சொத்துக்களை குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அதில் பிள்ளையார் கோவிலை சொல்லவில்லை என்றால் அந்த கோவில் கிடையாது, பிள்ளையார் சிலை மட்டும் இருந்தது. அது சொல்லப்படவில்லை. O.S. 109/2004 மற்றும் O.S. 110/2004 ன் வழக்கின் வாதி, பிரதிவாதிகள் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் இந்த பிரதிவாதிகளை ஏமாற்றும் விதத்தில் அவர்களுக்கு தொியாமல் கூட்டு சதி செய்து அந்த வழக்குகளை தாக்கல் செய்து அவர்களுக்கு ஆதரவாக மோசடியாக அந்த தீர்ப்பாணைகளை பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு மோசடியாக பெற்ற தீர்ப்பின் அடிப்படையில்தான் நிறைவேற்றுமனு தாக்கல் செய்தோம் என்றால் அந்த தீர்ப்பு மோசடியாக பெறவில்லை, நீதிமன்ற தீர்ப்பின்படி நிறைவேற்று மனு தாக்கல் செய்தோம். 11.10.2007 தேதியிட்ட மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் இந்த வழக்கில் வாதிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ. 9 கிரயப் பத்திரத்தில் 4 ஆம் பக்கத்தில் பணப்பற்று விவரத்தில் பின்னர் ரூபாய் 1,25,000/- எங்களிடமிருந்து மேற்படி நிறுவனம் பற்றியிருந்ததும் என கூறியுள்ள பணப்பற்றிற்கு ஆதரவாக எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். பட்டிகை சொத்தில் கழிப்பிடமும் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாதி நிறுவனத்திற்கு மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் எழுதி கொடுத்த ஆவணத்தில் 7 ஆம் பக்கத்தில் வழக்கு சொத்தில் தனியாக கழிப்பிடம் உள்ளதா என கேட்டுள்ள கேள்விக்கு இல்லை என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 10 ஆவணம் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்பட்டடுள்ள 12.09.2002 ல் பகவதியம்மன் திருக்கோவில் மேலாளர் அவர்களால் வெங்கடாச்சலம் ஐயருக்கு இந்த கோவிலுக்கு சொந்தமான சர்வே எண். 678/41 ல் 0.14.5 ஏர் இடம் அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமானது என்றும், தற்போது தாங்கள் மேற்படி இடத்தை அனுபவத்தில் வைத்திருப்பதாக தொிகிறது என்றும், எனவே கோவிலுக்கு சொந்தமான மேற்படி இடத்தை திருக்கோவிலுக்கு ஏற்பிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது என்றும், இல்லாத நிலையில் தாங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு ஏதாவது வெங்கடாச்சலம் ஐயர் பதில் அனுப்பினாரா என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அவ்வாறு பகவதியம்மன் திருக்கோவிலால் கடிதம் அனுப்பிய பிறகும் இந்த வழக்கு 3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளை அசல் வழக்கு எண். 110/2004 ல் நாங்கள் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 12 வழக்கறிஞர் அறிவிப்பு The Assistant Commissioner, Incorporated and Unincorporated திருக்கோவில்கள்

சுசீந்திரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தை யாருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல அந்த கடிதத்துடன் இணைக்கப்பட்டதாக சொல்லும் கடிதத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 13 ரசீது யாருக்கு யாரால் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல. Executive Officer Kanniyakumari Township னால் வேலாயுதம் தம்பிக்கு கொடுக்கப்பட்டது. அது 22.12.1969 தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 14 மற்றும் 15 ஆவணங்கள் வெங்கடாச்சலம் ஐயரால் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி அதிகாரிகளை சுவாதீனப்படுத்தி பெற்றவை என்றால் சரியல்ல. தற்போது கன்னியாகுமரி நகராட்சி ஆகிவிட்டது. வா.சா.ஆ. 16 ல் உள்ள ரசீதுகளில் வேலாயுதம் மட்டும்தான் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சில ரசீதுகளில் வேலாயுதம் எனவும், சில ரசீதுகளில் வேலாயுத தம்பி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றால் தற்போது சாட்சி வா.சா.ஆ. 16 ல் வேலாயுதம் மட்டும்தான் உள்ளதாக கூறுகிறார். அந்த மின்பகிர்மான எண் என்ன என்றால் ஆவணத்தை பார்த்துதான் சொல்ல முடியும். அந்த பகிர்மான எண். வேலாயுத தம்பியின் பெயரில் உள்ளதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இருக்கிறது. ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

(மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டு, மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை

தொடர்ச்சி).

வா.சா.ஆ. 19 ஆவணம் வெங்கடாச்சல ஐயர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் 23.09.2007 ல் அனுப்பப்பட்டுள்ளது. அந்த விவரம் வா.சா.ஆ. 20 கொரியர் ரசீதில் உள்ளது. வா.சா.ஆ. 20 மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியது அல்ல என்றாலும் உதவி ஆணையர், நாகர்கோவிலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 19 ஆவணத்தில் சர்வே எண்கள். 1/1, 1/31 மற்றும் 1/22 மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் நிறுவனத்திற்கு சர்வே எண்கள். 1/1, 1/31 மற்றும் 1/22 ஐ யார் எப்போது கிரயம் கொடுத்தார்கள் என்றால் அந்த சர்வே எண்களில் 1/22 என்பது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அது 122 என இருந்திருக்க வேண்டும். வா.சா.ஆ. 19 ஆவணத்திற்கு இந்த சர்வே எண் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டதாக கூறி, சரியான சர்வே எண். 122 என்று ஏதாவது Corrigendum வெங்கடாசல ஐயராலோ அல்லது அவருடைய வழக்கறிஞராலோ கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அவ்வாறு எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 19 ஆவணத்தில் மாவட்ட ஆட்சியரிடம் உதவி ஆணையர் எடுக்க இருந்த நடவடிக்கையை நிறுத்துமாறுதான் வெங்கடாச்சல ஐயர் கூறியிருந்தார் என்றால் சரிதான். அதன்பேரில் மாவட்ட ஆட்சியர் அந்த நடவடிக்கையை நிறுத்துவதற்கு மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 15.03.2005 ல் வெங்கடாச்சல ஐயர் அகஸ்தீஸ்வர

வட்டாட்சியருக்கு மனு கொடுத்து ரீசர்வே எண். 678/41 ல் 0.37 சென்ட் நிலம் குறித்து தன் பெயரில் பட்டா மாற்றம் செய்ய கோரி மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதன்பேரில் 07.11.2007 ல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வெங்கடாச்சல ஐயருக்கு 19.11.2007 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் மேற்கொள்ள இருந்த விசாரணைக்கு அவர் முன்னிலையில் ஆஜராக கேட்டுக் கொண்டு அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ. 34 என்றால் சரிதான். அந்த விசாரணை அடிப்படையில் வெங்கடாச்சல ஐயர் பெயரில் எந்த ஒரு பட்டா மாற்றமும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த 19.11.2007 அன்று வெங்கடாச்சல ஐயர் விசாரணைக்கு சென்றாரா என்றால் சென்றார். நான் ஒருங்கிணைப்பாளராக 2010 ல் தான் பதவி ஏற்றேன் என்பதால் அதற்கு முன்னர் நடந்த சங்கதிகள் எனக்கு தொியாது என்றாலும் நான் அவ்வாறு விசாரணைக்கு சென்றார் என்று நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த அலுவலகத்தில்தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த தேதியில் நான் அந்த அலுவலகத்தில் வேலை பார்த்தேன் என காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். 2010 க்கு முன்னர் நான் அந்த அலுவலகத்தில் வேலை பார்த்தேன் என என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வா.சா.ஆ. 21 ஆவணம் வெங்கடாச்சல ஐயர் Executive Officer, Bhagavathiamman Temple, Kanniyakumari and Deputy Commissioner, Incorporated and Unincorporated Temples, Kanniyakumari ஆகிய இருவர் மீது தாக்கல் செய்த வழக்கின் பிராது

என்றால் சரிதான். அந்த பிராதை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் தொியும் என்றால் சரிதான். அந்த வழக்கான O.S. No. 537/2002 எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் நாகர்கோவில் நீதிமன்றத்தில் சட்டத்திற்கு புறம்பாக அவரை வெளியேற்றக் கூடாது என கோரி அந்த பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாறு அந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் மொத்தமாக எதிாிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 21 பிராதில் பத்தி 2 ல் 31 சென்ட் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பிராதில் 3 வது பத்தியில் சாவிகள் பகவதிபிள்ளை கொச்சும்மாவின் மேலாளரிடம் கொடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மேலாளரின் பெயர் என்ன என்றால் அது எனக்கு தொியாது. பகவதிபிள்ளை கொச்சும்மாவிற்கு எந்த ஆண்டு சொத்தில் உரிமை ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. 1914 ல் உரிமை ஏற்பட்டது. வேலாயுத தம்பி பெயரில் 1948 ல் ஏற்பட்டதாக சொல்லும் ஆவணம் என்ன ஆவணம் என்றால் பாகபிாிவினை ஆவணம். வேதபாடசாலையை வெங்கடாச்சல ஐயர் எப்போது நடத்தினார் என்றால் அவர் நடத்தவில்லை. முதலில் மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் 2 ஆண்டுகள் நடத்தினார்கள். அதன்பிறகு விஸ்வ ஹிந்து வித்யா கேந்திரா நடத்தினார்கள். அவ்வாறு எந்த 2 ஆண்டுகள் மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் வேதபாடசாலை நடத்தினார்கள் என்றால் 1981 மற்றும் 1982 ல்

நடத்தினார்கள். அதற்கு முன்னர் அவர்கள் நடத்தவில்லை என்றால் சரிதான். அவ்வாறு 1981 மற்றும் 1982 ல் அவர்கள் வேதபாடசாலை நடத்தினார்கள் என காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். பிராதில் 12 வது பக்கத்தில் கூறியுள்ளதுபோல 50 வருடத்திற்கு மேலாக தாவா சொத்து வெங்கடாச்சல ஐயரின் சுவாதீன்த்தில் இருந்தது என காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 21 ல் வழக்கு பட்டிகையில் ரீசர்வே எண் மட்டும் தான் கூறப்பட்டுள்ளது என்றாலும் இதற்கு சரியான பழைய சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ. 21 பிராதில் வழக்கிற்கான மூலக்காரணம் 12.09.2002 எழுந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 12.09.2002 ல் Executive Officer, Bhagavathiamman Temple, Kanniyakumari and Deputy Commissioner, Incorporated and Unincorporated Temples, Kanniyakumari கோவில் சுசீந்திரம் ஆகியோர் விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவிடமிருந்து வழக்கு சொத்தின் சுவாதீனத்தை கேட்ட பிறகும் அந்த சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரி எந்த வழக்கும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். O.S. 537/2002 ற்கு முன்னரும் பல வழக்குகள் வாதியான விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை வழக்குகள் போட்டிருப்போம் என்றால் அது தற்போது என்னால் சொல்ல முடியாது. 7 மற்றும் 8

வழக்குகள் தாக்கல் செய்திருப்போமா என்றால் ஆவணங்கள் பார்த்துதான் சொல்ல முடியும். அந்த வழக்குகளிலாவது தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளதா என்றால் கேட்கப்படவில்லை. வா.சா.ஆ. 21 ஆவணத்தில் ஆவணப் பட்டியலில் விற்பனை ஒப்பந்தத்தின் தேதி 16.11.1988 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எந்த ஒப்பந்தம் என தொ ியவில்லை. அந்த தேதி பொய்யானது என்றாலும் அது 16.11.1983 என்றாலும் அது குறித்து எனக்கு தொ ியாது. வா.சா.ஆ. 22 பதிலுரையை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. அதில் உள்ள விவரங்கள் தெரியாதா என்றால் தொ ியாது. அந்த பதிலுரையில் தாவா சொத்து வேலாயுத ஐயருக்கோ பகவதி பிள்ளை கொச்சம்மாவிற்கோ பாத்தியப்பட்டது அல்ல என்றோ அது முழுக்க முழுக்க பகவதியம்மன் கோவிலுக்கு சொந்தமானது என்று கூறப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொ ியாது. அந்த பதிலுரையில் 4 வது பத்தியில் பகவதி பிள்ளை கொச்சம்மா தாவா சொத்தின் சுவாதீனத்தில் எப்போதும் இருந்தது இல்லை என்று கூறப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொ ியாது. அது போல 5 வது பத்தியில் பி.ஆர். ராமவர்மராஜா மற்றும் வேலாயுத தம்பி, கார்த்தியாயினி கொச்சம்மாளின் வாரிசுகள் அல்ல என்றும்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொ ியாது. வேலாயுத தம்பி தாவா சொத்திற்கு எந்தவித தொடர்பும் அற்றவர் என்றால் அவர் ஒரு வேற்று நபர் என்றும் அந்த பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தொ ியாது. வெங்கடாச்சல ஐயர் பெயரில் ஏற்பட்டதாக சொல்லும் கிரய பத்திரம், அதற்கு அவர் பணம் கொடுத்ததாக

சொல்லும் ரசீதும் தாவா சொத்தை அருள்மிகு பகவதியம்மன் கோவிலிடமிருந்து அபகரிப்பதற்காக மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பதிலுரையில் தாவா சொத்து பகவதியம்மன் கோவிலின் தானிய களஞ்சியம் என முந்தைய காலத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது அவ்வாறு பயன்படுத்தவில்லை. அவ்வாறு பிராதில் பகவதியம்மன் கோவிலுக்குதான் தாவா சொத்து உரிமையானது என பல வகைகளில் அறுதியிட்டு சொல்லபட்டிருக்கும்போது கூட வாதி தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கிற்கு முன்னர் வரையில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. O.S. 270/2000 மற்றும் O.S.217/2000 ஆகிய இரு வழக்குகளும் மோசடியாக அந்த வழக்குகளின் வாதி, பிரதிவாதிகள் கூட்டுச் சேர்ந்து ஒரு மோசடியான தீர்ப்பை நீதிமன்றத்தை ஏமாற்றி பெற்றுள்ளதாக அந்த வா.சா.ஆ. 21 பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 23 O.S. 537/2002 ல் ஏற்பட்ட 28.07.2011 தேதியிட்ட தீர்ப்புரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். வா.சா.ஆ. 23 தீர்ப்புரையில் பத்தி 10 ல் இந்த வழக்கை வாதி விளம்புகை கோரி தாக்கல் செய்யவில்லை என்று நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது என்றால் சரிதான். அதே பத்தியில் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்காதபோது இந்த நீதிமன்றம் விளம்புகை குறித்து தீர்மானிப்பது நீதியின் நலனை முன்னிட்டு சரியாக அமையாது என கருதுவதால் மேற்கண்ட எழுவினாவை பொருத்து இந்த நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பத்தி 12 ல் இந்த வழக்கில் வாதி கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கினால் உரிமை மூலம் சம்பந்தமாக தீர்மானிக்க வேண்டிய நிலை இந்த நீதிமன்றத்திற்கு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் ஆவணங்களின் அடிப்படையிலும் வாதி பட்டிகை சொத்தை தொடர்ந்து கைவசத்தில் வைத்து அனுபவித்து இருப்பதை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளதாலும், பிரதிவாதிகள் வாதியை சட்டப்படியான முறையை பின்பற்றிதான் வெளியேற்ற வேண்டும் என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி எழுவினா 1 மாற்றியமைக்கப்பட்டு வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பானது 28.07.2011 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணைக்கு பிறகும் விளம்புகை கோரி 2011 க்கு பிறகும் எந்த உரிமையியல் நீதிமன்றத்திலும் இந்த வழக்கிற்கு முன்னர் வாதி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 23 தீர்ப்புரையில் வாதி நிறுவனத்தின் சென்னை அலுவலக மேலாளர் பாலசுப்பிரமணியம், விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவின் பொது மேலாளர் வேதாந்தம் மற்றும் ஒரு சரோஜா தம்பி ஆகியோர் வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 24 தீர்ப்பாணையில் உள்ள வழக்கு சொத்து பட்டிகையில் 2 தெற்கு சொல்லப்பட்டு ஒரு தெற்கு எல்லையாக பரமசிவம் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 25 இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதியால் அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். M.P. 2/2012 ன் விசாரணை 17.10.2012 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு இருப்பதாக கூறி எங்களுக்கும் மற்ற தரப்பினருக்கும் அனுப்பப்பட்ட அழைப்பாணை

என்றால் சரிதான். அதில் காட்டப்பட்டுள்ள சொத்தின் தெற்கு எல்லையாக கிழக்கு மேற்கே உள்ள கோவில் ரோடு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு பகவதியம்மன் கோவிலின் நான்காம் பிரகாரம் என்றால் சரியல்ல. பொதுவாக ரோடு என பொதுவான பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ள இடத்திற்கு மேலே கட்டுமானங்கள் எதுவும் செய்ய முடியாது என்றால் சரிதான். 3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளால் 4 ஆம் பிரகாரம் என சொல்லப்படும் அந்த ரோட்டின் மேலே டின் ஷீட்டினால் மூடப்பட்டுள்ளது என்றால் அது கடைகளுக்காக போடப்பட்டுள்ளது. அந்த கடைகள் கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் சொல்வது போல அது பொது ரோடுகள் கிடையாது என்றாலும் கோவிலின் நான்காம் பிரகாரம்தான் என்றாலும் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி M.P. 2/2012 ல் 29.03.2022 அன்று உத்தரவிட்டார் என்றால் சரிதான். அந்த உத்தரவை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அந்த உத்தரவின்படி இந்த வழக்கின் வாதியான நாங்கள் தாவா சொத்தை காலி செய்து பகவதியம்மன் கோவில் வசம் ஒப்படைக்காத பட்சத்தில் நாகர்கோவில் உதவி ஆணையர் சட்டப்படி வாதியை தபசில் சொத்திலிருந்து வெளியேற்றி சுவாதீனம் பெற்று அதனை திருக்கோவிலின் அறங்காவலரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். அந்த M.P. 2/2012 ல் எங்கள் கேந்திராவின் சார்பாக யார் யார் சாட்சியம் அளித்தார்கள் என்றால் திரு.வேதாந்தம் மற்றும் திருமதி. சரோஜா ஆகியோர்கள் சாட்சியம் அளித்தார்கள். அதில் 1 வது சாட்சி வேதாந்தம் என்றால் சரிதான். அவர் தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது கன்னியாகுமரி பொறுப்பாளராக தான் வெங்கடாச்சல ஐயரை

நியமித்தேன் என்றும் 1981 லிருந்து 2013 வரை அவர் பொறுப்பாளராக இருந்தார் என்றும் தொிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அன்னார் குறுக்கு விசாரணையின் போது எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் 9 ல் சர்வே எண். 122/2 என்ற சர்வே நிலத்தில்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், சர்வே எண். 122/2 க்கு தீர்ப்பு பெறப்பட்டது என்றால் சரிதான் என்றும், சர்வே எண். 122/2 சமரச தீர்ப்பு பெறப்பட்ட நிலையில் சர்வே எண். 678/41 கிரயப் பத்திரம் பெறப்பட்டது சரிதான் என்றும் கூறியதாக பக்கம் 10 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மேலும் சர்வே எண். 122/2, சர்வே எண். 678/41 என மாற்றப்பட்டதாக காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன் என்றும் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அந்த சர்வே எண். 122/2, சர்வே எண். 678/41 என மாற்றப்பட்டதாக காண்பிக்க ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறான ஆவணங்கள் இருக்கிறதா என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அதேபோல பக்கம் 11 ல் திரு. வேதாந்தம் தனது குறுக்கு விசாரணையின் போது எ.ம.த.சா. 5 ல் சர்வே எண். 1/1, 8 ஏக்கர் 17 சென்ட் நிலத்தில் 11 சென்ட் என்றும், அந்த 11 சென்ட் எந்த இடம் என சொல்லப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான் என்றும் தொிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 26 ல் பக்கம் 11 ன் 2 வது பத்தியில் பகவதிகொச்சம்மை என்ற பெயரில் பதித்த ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் கன்னியாகுமரியில் அம்மை வீடு எங்கு உள்ளது என்று தொியாது என்றும் வேதாந்தம் தனது குறுக்கு விசாரணையில்

கூறியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 26 ல் பக்கம் 11 ல் கடைசி வரியில் தனக்கு திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் தனக்கு கிடையாது என்றும், கோவிலுக்கு சொந்தமானது என்று சொன்னால் அதை கொடுப்பதற்கு தனக்கு சம்மதம் தான் என்றும் திரு. வேதாந்தம் குறுக்கு விசாரணையில் கூறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 26 உத்தரவுக்கு எதிராக இந்து அறநிலையத் துறை ஆணையர் முன்பாக ஒரு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அது எந்த தேதியில் தாக்கல் செய்தோம் என்றால் அது ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். அந்த சீராய்வு மனுவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு தற்போதும் நிலுவையில்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வாதிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 29, 15.09.1973 ஆம் தேதியிட்ட வரைபட அனுமதியில் சர்வே எண். 122/2 வில் உள்ள இடத்திற்கு கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அனுமதி ஆணை தேதியிலிருந்து 6 மாதத்திற்கு மட்டும்தான் செல்லுபடியாகும் என்றால் சரிதான். அதில் கதவு எண். 1/61 மட்டும்தான் என்றால் சரிதான். சர்வே எண். 122/2 ல் வாதி சொந்தம் கொண்டாடும் சொத்து இருக்கும் சர்வே எண். 122 ஆ அல்லது 122/2 ஆ என்றால் சர்வே எண். 122 ஆகும். அந்த வா.சா.ஆ. 29 ஆவணம் தாவா சொத்திற்கு தொடர்புடையது அல்ல என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ. 29 ஆவணம் இந்த நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாதி

நிறுவனத்தின் துணை விதிகள் வா.சா.ஆ. 30 ன் படி அந்த நிறுவனத்தின் தலைவரோ அல்லது பொது செயலாளரோ தான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. வா.சா.ஆ. 31 மற்றும் 32, வில்லங்கச் சான்றிதழ்கள் 01.01.1987 முதல் 26.11.2007 வரை மற்றும் 01.01.1969 முதல் 09.07.1981 வரைக்கான தாவா சொத்து குறித்தான வில்லங்க சான்றிதழ்கள் என்றால் சரிதான். இந்த வில்லங்க சான்றிதழ்களை தவிர வேறு எந்த வில்லங்க சான்றிதழ்களும் தாவா சொத்து குறித்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள கிரய ஆவணம் அசல் வழக்கு எண். 110/2004 ல் ஏற்பட்ட தீர்ப்பின் படி நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கிரயப் பத்திரம் என்றால் சரிதான். கன்னியாகுமரியில் ரீசர்வே நடவடிக்கைகள் எந்த வருடம் நடைபெற்றது என்றால் அது குறித்து தொியாது. வா.சா.ஆ. 33 வாதியின் வழக்கறிஞரால் 3 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய 26.05.2007 தேதியிட்ட அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ. 33 ல் குறிப்பிட்டுள்ளவாறு பிரதிவாதிகள் அத்துமீறி தாவா சொத்தில் நுழைந்ததாக காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அது தொடர்பாக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அவ்வாறு பிரதிவாதிகள் திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்து என கூறி தாவா சொத்தில் நுழைந்ததாக நாங்கள் கூறும் தேதிக்கு பிறகாவது தாவா சொத்து எங்களுக்கு சொந்தமானது என விளம்புகை கூறி உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்கு எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். 06.07.1981 ல் வெங்கடாச்சல ஐயர், நாகர்கோவிலில் உள்ள மகரிஷி இன்டர்நேஷனல்

இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் க்கு கிரய ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்லும் போது வெங்கடாச்சல ஐயர் பெயரில் தாவா சொத்து குறித்து பட்டா எதுவும் கிடையாது என்றால் சரிதான். 06.11.1983 ல் கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும்போதும் மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் பெயரிலும் பட்டா மாறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 36, 16.11.1983 தேதியிட்ட கிரய ஒப்பந்தம் கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலுக்கு சொந்தமான சொத்தை அபகரிப்பதற்காக வெங்கடாச்சல ஐயரும், மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் நிறுவனமும் மோசடியாக உருவாக்கிக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.